1994 மார்ச் 22]

தேர்வு மையம் அமைக்கவும், தேர்வு மையம் அமைக்க நிதிநிலை காரணம் என்றால், புதிய பள்ளிகளைத் துவக்க ஒரு குறிப்பிட்ட தொகையைக்கட்டி துவக்குவதுபோல, சுமார் ரூபாய் 5 ஆயிரம் அளவில் அரசுக்கு நன்கொடை செலுத்தினால், குறிப்பிட்ட கால நிர்ணயத்தில் எல்லா ஊர்களுக்கும் எஸ்.எஸ்.எல்.சி.-க்கும் பிளஸ் 2-க்கும் தேர்வு மையம் 5 கிலோ மீட்டருக்குள் அமைக்க அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆண்டுக்கு 50 புதிய தேர்வு மையங்கள் என்ற அடிப்படையிலே இப்போது அனுமதிக்கப்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்து பரிசீலிக்கப்பட்டு அது ஏற்புடையது என்று குழு ஒப்புதல் தருமாயின் அதுபற்றி அரசு முடிவெடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா எண் 76, திரு. எஸ். ஆண்டித்தேவர், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.*

76—

டி. குண்ணத்தூரில் உள்ள ஊருணியில் கழிவுநீர் கலப்பதைத் தடுத்தல்

****17172—திரு. எஸ். ஆண்டித் தேவர்:***

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், திருமங்கலம் வட்டம், டி .குண்ணத்தூர் கிராமத்தில் பேருந்து நிற்குமிடத்திலுள்ள ஊருணியைச் சுற்றி கடைகள் மற்றும் குடிசைகள் உள்ளதால் அவற்றின் கழிவு நீர் ஊருணியில் கலந்து கேடு விளைவிப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், இவற்றை அப்புறப்படுத்தி ஊருணியைப் பாதுகாக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மதுரை மாவட்டம், திருமங்கலம் வட்டம், டி.குண்ணத்தூர் கிராமத்தில் பேருந்து நிற்குமிடத்திலுள்ள ஊருணியில் கழிவுநீர் கலக்கவில்லை, அவ்வாறு கலக்காமல் இருக்க தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. எஸ். ஆண்டித் தேவர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டம், திருமங்கலம் வட்டம், டி.குண்ணத்தூர், 3 ஆயிரம், 4 ஆயிரம் ஜனத்தொகை உள்ள ஒரு பெரிய கிராமமாகும். அந்த கிராம மக்கள் அனைவருமே அந்த ஊருணியின் மத்தியிலுள்ள ஒரு*

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

கிணற்றில்தான் குடிதண்ணீர் எடுக்கிறார்கள். அதனுடைய கரைப்பகுதியிலே ஆக்கிரமிப்புக் கடைகள், அதாவது டீக்கடைகள் போன்ற கடைகளை வைத்து அந்தக் கழிவு நீர் உள்ளே போகிறது. அந்த ஆக்கிரமிப்புகளை அகற்றி, ஒரு பேரபட் வால்-ஐ கட்டி, நிலைமையை சரிசெய்து, ரோட்டிலுள்ள தண்ணீர் உள்ளே போகாமல் இருக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவிக்கின்ற அந்த டி.குண்ணத்தூர் கிராமம் பேருந்துகள் நிற்கும் இடத்திலுள்ள ஊருணியில் கடைகளிலிருந்து வெளியேறும் கழிவுநீர் மற்றும் குடிசை வீடுகளின் கழிவுநீர் எதுவும் வந்து விழவில்லை என்ற அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது. அதேபோல, இந்தக் கடைகள் பல ஆண்டுக் காலமாக அங்கே இருக்கின்ற காரணத்தாலும், குடிசைகளும் அங்கே பல ஆண்டுக்காலமாக இருந்து வருகின்ற காரணத்தாலும், உள்ளாட்சித் துறையிலிருந்து ஏற்கனவே அந்தக் கடைகளுக்கும் அங்கேயுள்ள குடிசையில் இருப்பவர்களுக்கும், டின்களிலே கழிவுநீரை வைத்து, கழிவு நீர் வெளியே செல்லாத அளவிற்கு, ஊருணியைப் பாதுகாக்க வேண்டுமென்றும், கழிவுப் பொருள்களை டின்களிலே வைத்துக்கொண்டு அப்புறப்படுத்த வேண்டுமென்றும் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு, அவர்களுக்கும் அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. மீண்டும் அந்த ஊருணியில் அப்படி கழிவுநீர் கலக்கும் என்று கருதினால், ஆய்வு செய்து அப்படி இருக்குமாயின், அந்தக் கடைகளை அப்புறப்படுத்துவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 77, திரு.பி.ஆர்.எஸ். வெங்கடேசன், திரு.எ.தெய்வநாயகம், இருவரும் இருக்கையில் இல்லை.

வினா எண் 78, திரு. வே. பெரியசாமி, மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத் துறை அமைச்சர்.

78—

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் மூலம் அம்மாப்பேட்டை ஒன்றிய மீனவர்களுக்குக் கடன் வழங்குதல்

****21100—திரு. வே. பெரியசாமி :***

மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெரியார் மாவட்டம், அம்மாப்பேட்டை ஒன்றியம், அம்மா பேட்டையிலும், நெருஞ்சிப்பேட்டையிலும், சின்னப் பள்ளத்திலும், ..ந்தியூரிலும், கீழ்வாணியிலும் வசிக்கும் மீனவர்கள் வலை, படகு வாங்க ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் மூலம் கடன் வழங்க அரசு ஆவன செய்யுமா?